பக்கங்கள் 6 விலை சதம் 40 ★

# ஈழநாடு
The EELA NADU

மலர்: 19 புரட்டாசி 19 ஷவ்வா 21 இதழ் 235
யாழ்ப்பாணம் புதன்கிழமை 5-10-77

## அகதிகளுக்கு அமெரிக்கா 8 லட்சம் டாலர் உதவி

### கூடாரம், படுக்கை விரிப்புகள் மருந்துகள் உட்பட பணமும் கிடைக்கும்

கொழும்பு, செவ் இலங்கையில் அண்மையில் இடம்பெற்ற இனக்கலவரத்தினால் பாதிக்கப்பட்டு முகாம்களில் இருந்துவரும் அகதிகளின் நிவாரணப் பணிகளுக்கு அமெரிக்கா 7 லட்சத்து 42 ஆயிரம் டாலர் பெறுமதியான பொருட்களையும் 25 ஆயிரம் டாலர் பணத்தையும் வழங்க உள்ளது.

இலங்கை அரசாங்கத்தின் வேண்டுகோளின் பேரிலேயே சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க நிலையம் இந்த நிவாரண உதவியை வழங்குகிறது.

இந்த நிவாரணம் சிங்கப்பூரில் உள்ள மேற்படி நிறுவனத்தின் களஞ்சியத்திலிருந்து இன்னும் சில தினங்

(6-ம் பக்கம் பார்க்க)

# அரசியல் அமைப்பு திருத்தம் பேரவையில் நிறைவேறியது

## கூட்டணி பங்குபற்றவில்லை; சுதந்திரக்கட்சி வெளிநடப்பு

### தொண்டமான் வாக்களித்தார்

(கொழும்பு)

**இலங்கை அரசியல் அமைப்புக்குப் பிரதமர் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவினால் கொண்டுவரப்பட்ட திருத்தம் நேற்றுத் தேசிய அரசுப் பேரவையில் நிறைவேறியது.**

**தமிழர் விடுதலைக் கூட்டணி, இன்றைய விவாதத்திலோ வாக்கெடுப்பிலோ கலந்துகொள்ளவில்லை.**

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள், திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தலைமையில் அரசியல் அமைப்புத் திருத்தம் மீதான விவாதத்தில் கலந்துகொள்ளாது பேரவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களில் ஒருவரும், நுவரேலியா-மஸ்கேலியாத் தொகுதி மூன்றாவது உறுப்பினருமான திரு. எஸ். தொண்டமான் உட்பட 128 பேர் இத்திருத்த மசோதாவுக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

அரசியல் அமைப்பு திருத்தம் மீதான விவாதம் இன்று தேசிய அரசுப் பேரவையில் ஆரம்பமானபோது எதிர்க்கட்சித்தலைவர் திரு. ஏ. அமிர்தலிங்கம் சபையில் அறிக்கை ஒன்றை வெளியிடுவார் எனத் தெரிவித்தார்.

இதையடுத்து திரு. அமிர்தலிங்கம், அரசியல் அமைப்பில் கொண்டுவரப்பட்டுள்ள திருத்தம் நாட்டில் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என்றும் தமிழ்மக்களின் இன்றைய நிலையை நாட்டுமக்களுக்கும் உலகுக்கும் எடுத்துக்காட்டும்வகையில் தமிழர்கூட்டணி இந்த விவாதத்திலோ வாக்கெடுப்பிலோ கலந்துகொள்ளமாட்டாது என்றும் தெரிவித்து சபையில் அறிக்கை ஒன்றை விடுத்தார்.

1972ம் ஆண்டு இந்த அரசு

(5-ம் பக்கம் பார்க்க)

## 'இந்நாட்டில் தமிழர்உயிர் வாழக்கூடஉரிமையில்லையே'

### விவாதத்தில் கலந்து கொள்ளாதது குறித்து அமிர் தரும் விளக்கம்

கொழும்பு, செவ்வாய்

''தமிழ்மக்கள் இந்த நாட்டில் இன்று உயிர் வாழக்கூட உரிமையில்லாத நிலையில் இருக்கிறார்கள். இந்நிலையில் அரசியல் அமைப்பு திருத்த மசோதா மீதான விவாதத்தில் கலந்துகொள்ளக்கூடிய சூழ்நிலையில் தமிழ்மக்களோ அன்றி தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பிக்களோ இல்லை.''

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஏ. அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

நேற்று கொழும்பு சிராவஸ்தியில் நடைபெற்ற தமிழர் விடுதலைக்கூட்டணி ஆட்சிமன்றக்குழுக் கூட்டத்தில் கலந்துகொண்ட பின்னர் திரு. அமிர்தலிங்கம் நமது நிருபரிடம் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. அமிர்தலிகம் மேலும் கூறியதாவது:

### முற்றாக நிராகரித்த அரசியல் அமைப்பு

''இப்போது திருத்தம் செய்யப்படும் அரசியல் அமைப்பை நாம் அரசியல் நிர்ணயசபையிலும் தேசிய அரசுப்பேரவையிலும் முற்றுமுழுதாக நிராகரித்தோம். அதே அரசியல் அமைப்பே இன்று திருத்தப்படுகிறது. இத்திருத்த மசோதா மீதான விவாதத்தில் கலந்துகொள்வதில் தமிழ்மக்களுக்கு எதவித பலனும் கிடையாது.

''வட்டுக்கோட்டை மகாநாட்டுத் தீர்மானத்திற்கமையவே நாம் தேர்தலில் போட்டியிட்டு மக்கள் ஆணையைப் பெற்றுள்ளோம்.

''இதேவேளையில் தமிழ்மக்களது பிரச்னைகள் தீர்க்கப்படவேண்டும் என தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவித்திருந்த ஐக்கியதேசியக்கட்சி அரசியல் அமைப்புத் திருத்தத்திற்கு மக்கள் ஆணையைப் பெற்றிருந்தபோதிலும் இன்றைய அரசியல் அமைப்புத் திருத்ததில் தமிழ் மக்களின் பிரச்னைகள் குறித்து எதுவும்

(5-ம் பக்கம்பார்க்க)

## திருமதி கோபல்லவா காலமானார்

(கொழும்பு)

ஜனாதிபதி திரு. வில்லியம் கோபல்லாவின் பாரியார் நேற்று முன்தினம் மாரடைப்பால் காலமானார்.

திருமதி ஸீலாகோபல்லாவின் பூதவுடல் இன்றும் நாளையும் ஜனாதிபதி மாளிகையில் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. நாளை வியாழக்கிழமை இறுதிக்கிரிகைகள் நடைபெறும். (இ)

## யாழ் நகரில் கொள்ளைமுயற்சி

### இருவரில் ஒருவர்கைது பணமும்மீட்பு

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் இருந்து இலங்கை வங்கி வைப்பில் இடப்படுவதற்காக, சூட்கேஸ் ஒன்றினுள் எடுத்துவரப்பட்ட 17,000 ஆயிரம் ரூபா பணத்தை கொள்ளையடிக்க முயன்ற இரு வாலிபர்களில் ஒருவர் பொது மக்களால் கலைத்துப் பிடிக்கப்பட்டார். பணமும் மீட்கப்பட்டுள்ளது. இச்சம்பவம். யாழ்ப்பாணம் சப்பல வீதியில் நேற்றுக்காலை இடம்பெற்றது.

இருகாற்சட்டை அணிந்த வாலிபர்கள் சைக்கிள் ஒன்றில் வந்து கூட்டுத்தாபன காசாளர் வரும்வரை சப்பல் வீதிச் சந்தியில் காத்துநின்று காசாளர் சைக்கிளில் வந்துகொண்டிருக்கும் போது அவரை தள்ளிவிட்டு சூட்கேசை எடுத்துக் கொண்டு ஓட்டம் பிடித்தனராம்.

இவ்வாலிபர்களை காரில் வந்த கோஷ்டியும், சைக்கிளில் இன்னும் ஒரு கோஷ்டியினரும் கலைத்துச் சென்ற போது இவர்கள் புகையிரத நிலைய ஒழுங்கையால் சென்று ஆரியகுளச்சந்திக்கு ஓடினராம்.

இவர்கள் மீண்டும் பலாலி வீதி வழியாக ஓடியபோது, பலாலி வீதி இரண்டாவது ஒழுங்கையில் பணப்பெட்டி தவறி விழுந்து, பல பாகங்களிலும் பண நோட்டுக்கள் சிதறியதாம். பொதுமக்கள் பணத்தைப் பொறுக்கிக் கொடுத்ததுடன், உடுவிலைச் சேர்ந்த ரவீந்திரன் என்பவரையும் மடக்கிப் பிடித்தனராம். மற்றைய இளைஞர் தப்பி ஓடிவிட்டாராம்.

இச்சம்பவம் குறித்து விசாரணைக்குள்ளான சந்தேகநபரிடம் றிவால்வர் இருக்கக்

(5-ம் பக்கம் பார்க்க)

## கன்னதிட்டி துப்பாக்கிச் சூடு:

# இனந்தெரியாதவர் மரணம் கொலை எனத்தீர்ப்பு

**யாழ்ப்பாணம்,புதன்**

**யாழ்ப்பாணத்தில் நடந்த கலவரத்தின் போது கன்னதிட்டியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான இனம்தெரியாத நபரின் மரணம் கொலையெனத் தீர்ப்பளிக்கப்பட்டது**

1977-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 17-ம் திகதி கன்னதிட்டிச் சந்தியில் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான இனந்தெரியாத நபரின் மரண விசாரணை நேற்று யாழ். நீதவான் கே. வி. நவரத்தினம் முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டபோது நீதவான் மேற்கண்டவாறு தீர்ப்பளித்தார்.

நீதவான் தமது தீர்ப்பில் மேலும் தெரிவித்திருப்பதாவது:

துப்பாக்கிச் சூட்டினால் ஏற்பட்ட மரணம் எனத்தீர்ப்

(6-ம் பக்கம் பார்க்க)

# அகதிகளுக்கு மீன் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், புதன்

அச்சுவேலியிலுள்ள அகதிகளுக்கு பருத்தித்துறை சுப்பர்மட கடற்றொழிலாளர்களும், இன்பருட்டி சனசமூக நிலைய ஆதரவில் பல கடற்றொழிலாளர்களும் பெருந்தொகையான மீன் உணவு வகைகளை அன்பளிப்பாக கொடுத்துதவினர்.

சமூகசேவை அதிகாரிகள் அகதிகளுக்கு மீன் உணவுவாங்கச் சென்ற சமயம், அகதிகளின் நிலைபற்றி அப்பகுதி கடற்றொழிலாளர்கள் நன்கு விசாரித்து தாம் இலவசமாகவே மீன் உணவுவகைகளை அன்பளிப்பு செய்வதாக கூறி 2 நேர வேளைக்குபோதிய மீன் உணவுகளை உதவினர். (கெ-இ)


மீனவருக்கு

Perkins

ஓர் நற்செய்தி!

பேர்கின்ஸ் (Perkins)

D 3.152 மீன்பிடி வள்ள

டீசல் என்ஜின்கள்

தேவையானோர் உடனே எம்மைத் தொடர்புகொள்ளவும்.

சமுத்திரா ட்ரேட்ஸ் லிமிட்டெட்

23/2, ஸ்டான்லி வீதி — யாழ்ப்பாணம்

தொலைபேசி: 7236 (7271)


## பருத்தித்துறை நகரம்

## கேள்விப் பத்திர அறிவித்தல்-1978

கீழ்க்காணும் குத்தகைகளுக்கு 1977-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 12-ந் திகதி புதன்கிழமை பிற்பகல் 12-30 மணி வரையும் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்கள் கீழ்க் குறிப்பிடும் பிணைப்பணமும் பத்திரப் பணமும் 10-10-77 முற்பகல் 11-30 மணி வரை செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். பத்திரப்பணம் மீளளிக்கப்படமாட்டாது. மேலதிக விபரங்களை இவ்வலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

| | பிணைப் பணம் | பத்திரப் பணம் |
|---|---|---|
| | ரூ. ச. | ரூ. ச. |
| 1. மரக்கறிச் சந்தை (மக்கள்சந்தை) | 250-00 | 25-00 |
| 2. வான், வண்டில்காலை | 100-00 | 10-00 |
| 3. மீன்சந்தை | 150-00 | 10-00 |
| 4. மாட்டிறைச்சிக்கடை இல. 1 | 150-00 | 10-00 |
| 5. மாட்டிறைச்சிக்கடை இல. 2 | 150-00 | 10-00 |
| 6. ஆட்டிறைச்சிக்கடை | 150-00 | 10-00 |

மு. ம. தணிகாசலம்,
விசேட ஆணையாளர்,
பருத்தித்துறை நகரம்.

விசேட ஆணையாளர் அலுவலகம்,
பருத்தித்துறை,
29-9-77.

7300

## கோட்டு விற்பனை விளம்பரம்

மல்லாக நீதி மன்றம்

வழக்கு இல: 153

1. தாமோதரம்பிள்ளை சனகசுந்தரம்,
தெல்லிப்பளை வடமேற்கு, இளவாலை.

வாதி

எதிராக

1. காத்தான் சின்னத்துரையும்,
2. பெண் கண்மணி,
தெல்லிப்பளை, கொல்லங்கலட்டி, கலட்டி.

பிரதிவாதி

மல்லாக டிஸ்திரிக் கோட்டின் 153-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1977-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 21-ந் திகதி (21-10-77) வெள்ளிக்கிழமை 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

முதல் வட்டி ரூபா 1041/-. 24-9-74 தொடக்கம் 9-5-75 வரைக்கும் 600 ரூபாவுக்கு 12% வட்டியும், அதன் பின் முழுத்தொகைக்கும் இறுக்கப்படும்வரை 5% வட்டியும் கோட்டுச்செலவு 596 ரூபா.

### ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் வடக்குப்பகுதி தெல்லிப்பளைக் கோவிற்பற்று மாவிட்டபுரமிறை. தன்மத்திக் கலட்டி நிலபரப்பு (நி. ப. 4) நாலும் வேம்பும் எல்லை கிழக்கு சின்னவன் சங்கரனுக்கும் பெண் சாணைக்கும் உரிய ஆதனம். வடக்கு சின்னத்தம்பி இளையதம்பிக்கும் பங்காளருக்கும் உரிய ஆதனம். மேற்கு சின்னவன் மாணிக்கத்திஞதனம், தெற்கு பெரியதம்பி பொன்னுவுக்கும் பங்காளனுக்குமுரிய ஆதனம். இதில் கிழக்கொழுங்கையிலிருந்து இதன் வடக்கெல்லை அருகாக மேற்கெல்லைக் காணிக்குப் போக்கு வரவு பண்ணுகிற நாலு முழ அகலப் பாதை உரித்தும் புறநீங்கலாக இதடங்கலும் இன்னும் கிழக்கொழுங்கையிலிருந்து கிழக்குப்பக்கமாக காணிகளின் வடக்கெல்லையருகால் இதற்குப் போக்கு வரவு பண்ணும் நாலு முழ அகலப் பாதை உரித்தும்.

மு. விஜயராசன்,
நீதிமன்ற விற்பனை
விலைமதிப்பாணையாளர்.

கொக்குவில் மேற்கு,
கொக்குவில்,
30-9-77.

7305

1973-ம் ஆண்டின் 44 ம் இலக்க நீதி நிருவாகச் சட்டத்தின் 283 ம் பிரிவின் கிழான

## இடைக்காலக் கட்டளை

## இலங்கைக் குடியரசின் பகிரங்க நம்பிக்கைப் பொறுப்பாளர் முன்னிலையில்

யாழ்ப்பாணம் நாவலர் ரோட், 230 ம் இலக்கம், பொன்னம்பலம் நவரத்தினம் என்பவரின் மரணசாதனம் சம்பந்தப்பட்ட விடயத்தில்.

யாழ்ப்பாணம் நாவலர் ரோட், 230 ம் இலக்கம், பொன்னம்பலம் நவரத்தினம் கைம்பெண் ஞானதேவி,

விண்ணப்பகாரி

மற்றும்

வலயம்: யாழ்ப்பாணம்.
இல: 297.

1. நவரத்தினம் ஞானரத்தினம், அம்மன் ரோட், யாழ்ப்பாணம்.
2. சுப்பிரமணியம் கந்தசாமி பெண் மல்லிகாதேவி.
3. சுப்பிரமணியம் கந்தசாமி, இருவரும் 230 ம் இலக்கம், நாவலர் ரோட், யாழ்ப்பாணம்.

எதிர்வாதிகள்.

என்பவர்க்கிடையில்,

280 ம் பிரிவின்கீழ் தாக்கல் செய்யப்பட்டதும் 19-10-1976 திகதியிடப்பட்டதுமான விண்ணப்பத்திலிருக்கும் கூற்றுக்கள் பார்த்தமாத்திரத்தில் நிரூபிக்கப்பட்டன எனத் திருப்தியடைந்ததன்பேரில் 29-11-1976 ம் திகதியன்று அல்லது அதற்கு முன்னதாக எவராவது எதிர்க்காரணம் காட்டினாலன்றி 6-1-1976 ம் திகதியைக் கொண்டதும் 3024 ம் இலக்கத்தில் முடிந்ததும் பிரசித்த நொத்தாரிஸ் ச. செல்வராசா அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதும் இக்காரியாலயத்தில் சமர்ப்பிக்கப்பட்டு இப்போது இக்காரியாலயத்தில் வைக்கப்பட்டதுமான மரணசாதனம் நிரூபிக்கப்பட்டிருக்கிறதெனவும், மேற் சொல்லப்பட்ட விண்ணப்பகாரியே இதே மரணசாதனத்தில் சொல்லப்பட்ட நிறைவேற்றுனர் என்றும் சொல்லப்பட்ட மரணசாதனத்தின்மீதான மரணசாதன அதிகாரப்பத்திரம் சொல்லப்பட்ட விண்ணப்பகாரிக்கே முறைப்படி வழங்கப்படுமென்றும் யாழ்ப்பாண நீதி நிருவாக வலயத்தின் தத்துவப் பத்திர அதிகாரி கா. கணபதிப்பிள்ளை ஆகிய நான் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின்கீழ் செயல்பட்டு இத்தால் கட்டளையிடுகின்றேன.

(ஒப்பம்)

கா. கணபதிப்பிள்ளை
தத்துவப்பத்திர அதிகாரி,
யாழ்ப்பாணம்.

மேல் நீதிமன்றக் காரியாலயம்,
யாழ்ப்பாணம்,
19-10-1976.

காரணம் காட்டுவதற்கான காலம் 11-10-1977 வரைக்கும் நீடிக்கப்பட்டுள்ளது.

(ஒப்பம்)

கா. கணபதிப்பிள்ளை,
தத்துவப்பத்திர அதிகாரி,
யாழ்ப்பாணம்.

7308

## யாழ்ப்பாணத்தில் துப்பறியும் இலாகாக்கிளை

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணத்தில் துப்பறியும்இலாகாவின் கிளையொன்று திறக்கப்பட்டுள்ளது.

சமீபத்தில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற வன்செயல் சம்பவங்களைப்பற்றி பூரணவிசாரணைகளை மேற்கொள்ளும்முகமாக இக்கிளை அலுவலகம் திறக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. (கி-அ)

# வரி விளம்பரம்

### கல்வி

G. C. E. (A/L, O/L) விஞ்ஞான, வர்த்தக, கலைவிசேட வகுப்புக்கள் பல்கலைக்கழக விரிவுரையாளர்களாலும் விசேட பட்டதாரிகளாலும் சனி, ஞாயிற்றுக் கிழமைகளிலும் மாலை நேரங்களிலும் நடாத்தப்படும். ஆரம்ப திகதி 8-10-77. யாழ்ப்பாண கல்வி நிலையம். 22, இராமையா செட்டியார்லேன், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 7256

### பயிற்சிகள்

வெளி நாடுகளில் வேலைகளுக்கு ஏற்ற வெல்டிங், இலெக்றிக் வயறிங், ரேடியோ (Transister) பயிற்சிகள் இப்போது நடைபெறுகின்றன. விரைவில் City and Guilds (Electrical) மோட்டார் மெக்கானிசம் (Amimi) ஆரம்பமாகும். P. M. G. Certificate (General & Special) இம் மாதம் 14ம் திகதி ஆரம்பமாகிறது. உடன் பதிவு செய்யவும். வெளியூர் மாணவர்களுக்கு தங்கும் வசதிகளுண்டு மைற் மண்டபம், 128 பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 7307

### விற்பனைக்கு

அரியாலையில் உள்ள பூதா கோயிலுக்கு அண்மையில் சகல வரும்படியுள்ள 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு க. குமாரசாமி 30/30 அருளம்பலம் லேன், அரியாலை. 7289

நல்ல நிலையிலுள்ள EY கில்மன் கார் விற்பனைக்குண்டு. இரண்டாவது சொந்தக்காரர் சாந்திமில், வட்டுக்கோட்டை. 7296

### விற்பனைக்கு

6ம் வகுப்புமுதல் 9ம் வகுப்பு வரையுள்ள மாணவர்களுக்கென நவீனமுறையில் தயாரிக்கப்பட்ட தென்னந்தும்புத் தொழில் வினாவிடைப்பயிற்சிப் புத்தகம் வெளிவந்துவிட்டது. விலை ரூ. 3-00. ஆசிரியர் எவ். எக்ஸ். துரைராசா, 4,டேவிட் வீதி, யாழ்ப்பாணம். 7298

N. C. G. E. தமிழ்மொழி பகுதி I. மதிப்பீட்டுப்பயிற்சிக் கோவை. விலை ரூபா 2/-வெளியீடு: தமிழ் வளர்ச்சிக்கழகம், காரைநகர். கிடைக்குமிடங்கள்: ஸ்ரீலங்கா புத்தகசாலை, யாழ்ப்பாணம். புஷ்பா ஏஜென்ஸி, 244,பிரதானவீதி, திருகோணமலை, தமிழ் வளர்ச்சிக் கழகம், காரைநகர். 7306

### தேவை

யாழ் நகரில் பிரபலமான ஒரு றேடியோ ஸ்தாபனத்திற்கு றேடியோ ரெக்னிசன்ஸ் தேவைப்படுகின்றது. விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 7280, C/o ஈழநாடு லிமிட்டெட். யாழ்ப்பாணம். 7280

காஸ், எலெக்றிக் வெல்டிங் (Gas and Electric Welding) வேலைகளில் நான்கு வருடங்களுக்கு மேல் அனுபவமுள்ளவர்கள் உடனடியாகத்தேவை. திறமைக்கு ஏற்ப ஊதியம் கொடுக்கப்படும். விபரங்கட்கு: முகாமையாளர், நெல்லியடி இன்டஸ்றீஸ், கரவெட்டி. 7303

# வாழ்க்கையில் விரக்தி இளம் பெண் தற்கொலை!

யாழ்ப்பாணம் புதன்

திருமணம் முடித்து இரண்டு வருடத்திற்குள் வாழ்க்கையில் விரக்தியுற்ற இளம்பெண் ஒருவர் நஞ்சருந்தி தற்கொலை செய்துகொண்டார்.

இச்சம்பவம் கோண்டாவிலில் நெட்டிலிப்பாய் என்னுமிடத்தில் நேற்று நடைபெற்றது.

இச்சம்பவம்பற்றிக் கூறப்படுவதாவது:

பெண்ணை கணேசலிங்கம் மகேஸ்வரி (வயது 23) என்ற குறிப்பிட்ட பெண்ணின் கணவர் சுன்னாகம் சந்தையில் வியாபாரம் செய்பவர். இவர் வியாபாரம் செய்வது மனைவிக்குப் பிடிக்காததினால் ஏற்பட்ட சச்சரவினால் கணவன் வியாபாரத்திற்குச் சென்ற சமயம் மனைவி நச்சுத்திராவகம்அருந்தி தன் உயிரை மாய்த்துக் கொண்டார்.

இவரது மரணம் சம்பந்தமாக விசாரணை நடாத்திய மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். அமிர்தலிங்கம் தற்கொலை மரணம் எனத் தீர்ப்பளித்தார். (கு)

## விஸ்வமடுக்குளம் வாலிபதிட்ட விவசாயக் கூட்டுறவுச் சங்கம் விளம்பரம்

விஸ்வமடுக்குளம் வா. தி. வி. கூ. சங்கத்தில் 1,750 வெற்றுச்சாக்குகள் கேள்விப் பத்திரம் மூலம் விற்பனைக்கு இருக்கின்றன. 09-10-77க்கு முன்னர் ரூபா 10/- மேற்படி சங்கத்தில் கட்டி கேள்விப்பத்திரம் பெற்றுக்கொள்ளவும்.

கேள்விப்பத்திரம் 14-10-77 பகல் 12 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால் மூலம் பின்வரும் விலாசத்திற்கு அனுப்பவும்.

பொது முகாமையாளர்,
வா. தி. வி. கூ. சங்கம்
விஸ்வமடுக்குளம்,
பரந்தன்.

7301

## "பச்சைவட்ட பஸ்சேவை இங்கும் நடந்துக"

பண்டத்தரிப்பு,செவ்வாய்

யாழ்ப்பாணத்தில் பஸ் பிரயாணிகள் நீண்ட காலமாக அனுபவித்து வரும் சிரமங்களை ஓரளவு குறைக்க வகை செல்யுமுகமாகத் கொழும்பில் நடாத்தப் படுவது போன்ற பச்சைவட்ட பஸ் சேவையை இங்கும் விரைவில் ஆரம்பிக்குமாறு போக்குவரத்து அமைச்சருக்கு அனுப்பி வைத்துள்ள அவசர மகஜர் ஒன்றில் காங்கேசன்துறைத் தொகுதி ஐக்கிய தேசியக் கட்சி மத்திய குழு வேண்டியுள்ளது.

இந்த பச்சை வட்ட பஸ் வண்டிச் சேவையை கோண்டாவில் பஸ்டிப்போவிலிருந்து ஆரம்பித்து யாழ்ப்பாண பஸ் நிலையம், மானிப்பாய், சங்கானை, சண்டிலிப்பாய், அளவெட்டி, மல்லாகம், ஏழாலை குப்பிளான், புன்னாலை கட்டுவன், ஊரெழு, உரும்பிராய், ஆகிய இடங்களுக்கு ஊடாக நடாத்துமாறும் இதனால் நீதிமன்றம், பாடசாலை மற்றும் தொழில் நிலையங்களுக்குச் செல்லும் மக்களுக்கு மிகவும் வசதியாக இருக்குமென்றும் அந்த மஜரில் சுட்டிக் காட்டப் பட்டுள்ளது. (அ)

# அரசுக்கு 11 கோடி ரூபா நஷ்டம் விளைவித்தாராம்!



## மாஜிஸ்திரேட் முன்னிலையில் இந்திராகாந்தி ஆஜர்!

புதுடில்லி, அக்டோபர் 4

**லஞ்ச ஊழல், அதிகார துஷ்பிரயோகம் ஆகிய குற்றச் சாட்டுக்களின் மீது நேற்று மாலை புதுடில்லியில் கைதுசெய்யப்பட்ட இந்தியாவின் முன்னாள் பிரதமர் திருமதி இந்திராகாந்தி இன்று டில்லி மாஜிஸ்திரேட் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டார்.**

இரண்டு வழக்குகள் தொடர்பாக கைதுசெய்யப்பட்ட திருமதி இந்திராகாந்தி உடனடியாக பொலிஸ் காவலில் வைக்கப்பட்டு, பின்னர் ஜாமீனில்செல்ல அனுமதிக்கப்பட்டபோதிலும், ஜாமீனில் செல்ல அவர் மறுத்துவிட்டதாகத் தெரியவருகிறது.

திருமதி இந்திராகாந்தியுடன் (வேறு நான்கு வழக்குகள் சம்பந்தமாக) கைதுசெய்யப்பட்ட நான்கு அமைச்சர்கள், மற்றும் தொழில்அதிபர்கள் ஆகியோர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

### இந்திரா மீதான குற்றச்சாட்டுகள்

திருமதி இந்திராகாந்தி மீது இரண்டுகுற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

அரசு பதவியைத் தவருகப் பயன்படுத்தியது. மற்றையது ஊழல் சம்பந்தப்பட்டது.

கடந்த லோகசபைத் தேர்தலின்போது, தேர்தல் ஆதாயம் தேடும்வகையில் தமது பதவியைப் பயன்படுத்திய திருமதி இந்திராகாந்தி, காங்கிரஸுக்குச் சொந்தமில்லாத நாற்பது லட்சம் ரூபாவுக்கு ஜீப்புகளை வலவந்தமாக பல தொழிலதிபர்களிடமிருந்து பெற்றுக் கொண்டதாக ஒரு குற்றச் சாட்டு. மற்றையது; பிரேஞ்சு நிறுவனமொன்றுடன் ஒப்பந்தம்செய்துகொண்டு அதன் மூலம் பதினொரு கோடி ரூபா நஷ்டத்தை அரசுக்கு விளைவித்தது என்று மத்திய புலனாய்வுத் துறையினர் குற்றம்சாட்டியுள்ளனர். இதே ஒப்பந்தத்தை 40 லட்சம் டாலர் செலவில் செய்துகொள்ள மற்றுமொரு வெளிநாட்டுக் கம்பெனி முன்வந்தபோதிலும் இந்த ஒப்பந்தத்தைச்செய்துகொள்ளாமல், பிரெஞ்சுக்கம்பெனியுடன் ஒரு கோடி எழுபது லட்சம் டாலருக்கு ஒப்பந்தம் செய்து அதன் மூலம், அரசுக்கு பதினொரு கோடி ரூபா வீண் நஷ்டத்தை ஏற்படுத்தினர் என்று திருமதி இந்திரா காந்தி மீது புலனாய்வுத்துறையினர் குற்றம்சுமத்தியுள்ளனர்.

### மற்றைய வழக்குகள்

மற்றைய அமைச்சர்கள் நால்வர் மீதும் வெவ்வேறு குற்றச்சாட்டுகளை மத்திய புலனாய்வுத்துறையினர் சுமத்தியுள்ளனர்.

காங்கிரஸ் மலர்ஒன்று வெளியிடப்போவதாகக்கூறி, பெரும் பெரும் தொழிலதிபர்களிடம் தங்களின் பதவிகளைப்பாவித்து விளம்பரங்கள் சேகரித்தனர் என்றும் ஜப்பானியக் கம்பெனி ஒன்றுடன் முறைகேடான முறையில் ஒப்பந்தம் ஒன்று செய்துகொள்ளப்பட்டது என்றும் தொழில் அதிபர்களிடம் தங்களின் பதவிகளைப் பயன்படுத்தி நன்கொடை பெற்றுக் கொண்டனர் என்றும் குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

### இந்திரா கைதானபோது...

திருமதி இந்திராகாந்தி புதுடில்லியில் கைதுசெய்யப்படப் போகின்ருர் என்ற செய்தி பரவத் தொடங்கியதும் நேற்று மாலை அவரின் ஆதரவாளர்கள் நூற்றுக்கணக்கில் கூடி, கோஷம் எழுப்பினர். திருமதி இந்திரா காந்தி கைதுசெய்யப்பட்டு வாகனத்தில் அழைத்துச் செல்லப்பட்டபோது, திருமதி காந்தியின் ஆதரவாளர்கள் பாதையைத் தடைசெய்தனர். இந்த நிலைமையைச் சமாளிக்க பெருமளவு பொலிஸார் அழைக்கப்பட்டிருந்தனர்.

### தொழில் அதிபர்கள்

நேற்றுமாலை கைதுசெய்யப்பட்ட எட்டு பெரும் தொழில் அதிபர்களில் திரு. அருணாசலம், திரு. அதர்வால், திரு. தவன் ஆகியவர்களும் அடங்குவர். கைதுசெய்யப்படவிருந்த மற்றுமொருவர் தற்போது வெளிநாட்டில் இருக்கின்ருர் என்று அறிவிக்கப்பட்டது.

### காங்கிரஸ் கூடியது

திருமதி இந்திரா காந்தியையும் மற்றும் முன்னாள் அமைச்சர்களையும் கைதுசெய்தது குறித்து காங்கிரஸ் கண்டனம் தெரிவித்துள்ளது.

காங்கிரஸின் கமிட்டி இன்று அவசரமாகக்கூடி நிலைமை பற்றி ஆராய்ந்தது.

### இந்திரா கோரிக்கை

கைதானபின்னர் திருமதி இந்திரா காந்தி வெளியிட்ட அறிக்கை ஒன்றில் மக்களை அமைதியாக இருக்குமாறு கோரியுள்ளார்.

லஞ்ச ஊழல், அதிகார துஷ்பிரயோகம் சம்பந்தமாகவே கைதுசெய்யப்பட்டார் என்று அரசு கூறியிருப்பதை மறுத்துள்ள திருமதி இந்திரா காந்தி, "என்னைப் பழிவாங்கவும், அவமானப்படுத்தவும், மக்களுடன் நான் நெருக்கமாவதைத் தடைசெய்யவுமே என்னைக் கைதுசெய்துள்ளனர்' என்று தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

''என்னைக் கைதுசெய்ததற்குக் காரணம் அரசியல்தான்'' என்று திருமதி இந்திரா காந்தி தெரிவித்துள்ளார்.

---

# இடி அமீனை ஏமாற்றிவிட்டனர்!

லண்டன், அக். 4

உகண்டா அதிபர் இடி அமீனைப் பதவியிலிருந்து கவிழ்க்க சதி செய்ததாகக் குற்றம்சாட்டப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருந்த நான்குபேரை இராணுவ உடையில் வந்த அவரது சகாக்கள் சாதுரியமான முறையில் சிறைமீட்டுச் சென்றுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டது.

குறிப்பிட்ட கைதிகள் சிறைவைக்கப்பட்டிருந்த சிறைச்சாலைக்கு இராணுவ உடையில் சென்ற அவர்களது சகாக்கள், ஜெனரல் இடிஅமின் சிறையிலுள்ளவர்களை அழைத்து வரும்படி தங்களை அனுப்பியுள்ளார் என்று சிறைக்காவலர்களிடம் கூறி கைதிகளை அழைத்துச் சென்றனராம்.

இந்தக் கைதிகள் இப்போது கென்யாவுக்குத் தப்பியோடிவிட்டனராம்.

(இ)

---

# கலைஞரைகைதுசெய்யுமாறு

## டில்லியை எம். ஜி. ஆர். கேட்டாரா?

சென்னை, அக். 4

''தமிழகநிதியமைச்சர் மனோகரன், பைல் என்றும், வழக்கென்றும், கைது என்றும், கைவிலங்கென்றும், சிறை என்றும் மனம்போன போக்கில் நிலைதடுமாறிக்கொண்டு வருகிருர். இந்த மிரட்டல்களுக்குப் பயப்படுகிற கோழைகள் யாரும் கழகத்தில் இல்லை. எதையும் சந்தித்து வெல்லும் ஆற்றலும் திறமையும் கழகத்திற்கே உரியது என்பதைக் கூறக்கடமைப்பட்டிருக்கிறேன்'' என்று தி.மு. கழக பொருளாளர் ஜனுப் சாதிக் பாட்சா திருவெற்றியூர் காலாடிப்பேட்டையில் நடைபெற்ற முப்பெரும் விழாவில் கூறினுர்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: நிதியமைச்சர் எந்த அடிப்படையில் இவர் இவ்வளவு பேசுகிருர். எந்த அடிப்படையில் சர்க்காரியா கொடுத்த இடைக்காலஅறிக்கைமீது நடவடிக்கை எடுக்கலாம் என்று எண்ண மனோகரன் நிலை தடுமாறுகிருர். நிதானமின்றி மனம் போனபோக்கில் பேசுகிருர்.

''வட இந்தியாவின் உள்ள பிரபல பத்திரிகையாளர் பாபுராவ் படேல், அவரிடத்தில் விஸ்கி சிறந்ததா? அல்லது பிராந்தி சிறந்ததா என்று கேட்டாராம் திருவாசகர். அதற்கு பாபுராவ், ''இதுபற்றி மனோகரனுக்குத்தான் நன்கு தெரியும், அவரைக் கேளுங்கள்'' என்று பதிலளித்துள்ளார்.

''எங்களுக்கு கிடைத்த தகவல்களின்படி எம். ஜி. ஆர். அதிகாரிகளை டில்லிக்குஅனுப்பி கலைஞரை கைதுசெய்யுமாறு தூதனுப்பினுராம். மத்திய அமைச்சும் உள்துறை அமைச்சும் மறுத்து முடியுமானுல் நீங்கள் கைதுசெய்யுங்கள் என்றனராம். சர்க்காரியா இடைக்கால அறிக்கைமீது நடவடிக்கை எடுக்கமாட்டோம், மாநில அரசு முடிந்தால் நடவடிக்கை எடுக்கலாம் என்ருர்களாம்.

''முடிந்தால் செய்துபாருங்கள். கழகம் எதையும் சந்திக்கும் திறமையும் ஆற்றலும் வலிமையும் மிக்கது என்ற வரலாற்றை உலகுக்கு கழகம் வழங்கும். நீதி நிலைபெறக் காண்போம்'' என்ருர். (செ)

---

# கடத்தல் நாடகம் முடிந்தது

## செம்படை கடத்தல்காரர்கள் அல்ஜியர்ஸில் சரணுகதி!

அல்ஜியர்ஸ், அக்.4

**பம்பாயில் ஆரம்பித்து டாக்காவில் அரங்கேறிய ஜப்பானிய 'செம்படை' யினரின் ஆறுநாள்கடத்தல் நாடகம், அல்ஜியர்ஸில் 'சரணுகதி'யுடன் முடிவடைந்திருக்கிறது.**

பம்பாயிலிருந்து பாங்ஹொக் நோக்கிப் புறப்பட்ட ஜப்பானிய ஏர்லைன்ஸ் விமானத்தை, கடந்த புதன்கிழமை அந்த விமானம் புறப்பட்ட சிலமணி நேரத்துக்குள்ளேயே ஜப்பானிய கடத்தல்காரர்கள் திசைதிருப்பி, பங்களதேஷ் தலைநகரான டாக்காவில் 'நிலை' கொள்ளச்செய்து, தங்களின் கோரிக்கைகளையும் ஜப்பானிய அரசிடமிருந்து நிறைவேற்றி இறுதியில் மத்திய கிழக்கு நோக்கிப் புறப்பட்டு நேற்று அல்ஜீரியா தலைநகரமான அல்ஜியர்ஸில், அல்ஜீரிய அரசுஅதிகாரிகளிடம் சரணடைந்துள்ளனர்!

இவர்களின் கடத்தல் நாடகம் ஆறுநாட்கள் வரைநீடித்து நேற்றுடன் முடிவடைந்துள்ளது.

ஜப்பானிய கடத்தல் விமானத்தில் பன்னிரண்டுபிரயாணிகளுடன் அல்ஜியர்ஸ் வந்து சேர்ந்த கடத்தல்காரர்கள் அல்ஜீரிய அரசு அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு பேச்சுக்கள் நடத்தினர். அதன்பின்னர், எல்லாப்பிரயாணிகளையும், மற்றவர்களையும்விடுதலை செய்து, தங்களின் சக கைதிகளுடனும், அறுபது லட்சம் டாலர் பணத்துடனும் அல்ஜீரிய அரசு அதிகாரிகளிடம் சரணடைந்தனர்.

---

## நீதிபதி பழிவாங்கப்பட்டதாக முன்னுள் அமைச்சர் சாட்சியம்

புதுடில்லி, அக். 4

''குல்தீப்நய்யார் வழக்கில் மத்திய அரசுக்கு எதிராகத் தீர்ப்பளித்த நீதிபதி அகர்வால் பழிவாங்கப்பட்டார். அதைப் போலவே நீதிபதி லலித்தும் பழிவாங்கப்பட்டார். அத்தனை பேருடைய யோசனையையும் மீறி தன்னிச்சையாக இந்திரா முடிவெடுத்தார்'' என்று முன்னுள் சட்ட அமைச்சர் கோகலே ஷா கமிஷன் முன்னிலையில் சாட்சியமளிக்கையில் கூறினுர்.

நெருக்கடி நிலைமைகளின் போது இந்திராவின் செயல்களை அவர் விளக்கினுர்.

''நெருக்கடி நிலைமையின் போது டெல்லி உயர்நீதிமன்ற நீதிபதியான ஆர். என். அர்சுவால் செசன்ஸ் கோட்டுக்கு மாற்றப்பட்டு பதவியிறக்கம் செய்யப்பட்டார். தலைமை நீதிபதிகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் எனது பரிந்துரைகளுக்கு மாருக இந்திரா இந்த முடிவெடுத்தார் ஆனுல் அவர் ஏன் இப்படியான முடிவுகளை எடுத்தாரென என்னிடம் கூறவில்லை. என்றும் அவர் கூறினுர்.

# "மலைநாட்டுத் தமிழ் மாணவர் நலனைச் சிந்திக்கவேண்டும்"

## தமிழாசிரியர்கள் கூட்டத்தில் டாக்டர் பாலசிங்கம் உரை

யாழ்ப்பாணம், புதன்

"தென்பகுதியில் சில இடங்களில் குறிப்பாக மலைநாட்டில் தமிழ்ப் பிள்ளைகள் இருக்கிறபடியால் அவர்களின் நன்மை கருதி அங்கு போகத்தான் வேண்டும். நிலைமை சீராகும் வரை பொறுத்திருக்கவேண்டும்."

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடந்த பாதிக்கப்பட்ட தமிழ் ஆசிரியர் கூட்டத்தில் பேசிய, பாதிக்கப்பட்ட தமிழ் ஊழியர் கழகத் தலைவர் டாக்டர் க பாலசிங்கம் மேற்கண்டவாறு கூறினர்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத் தலைவர் திரு. எஸ். கே. வணசிங்கா தலைமையில் நடந்த இக்கூட்டத்தில், டாக்டர் பாலசிங்கம் மேலும் கூறியதாவது:-

"தபால் இலாகா ஊழியர்கள் கூடி தங்களுக்குள்ளேயே நடவடிக்கை எடுத்துள்ளார்கள். இதேபோல் இறைவரித் திணைக்கள ஊழியர்களும் கூடி ஒரு முடிவுக்கு வந்துள்ளார்கள். உகந்த வழியொன்றை அவர்கள் கையாண்டிருக்கிறார்கள். இவர்கள் எப்போது வேலைக்குத் திரும்புவதென்பது பற்றி இம்மாதம் 8ம் தேதி ட்றிம்மர் மண்டபத்தில் நடக்கும் கூட்டத்தில் அறிவிக்கப்படும்.

"பாதிக்கப்பட்ட அத்தனை பேருக்கும் எந்த ஊழியராயினும் ஒரு நிவாரணம் கிடைக்கும் என்பது நிச்சயம். இடமாற்ற விண்ணப்பத்திற்குப் பதில் கிடைக்கும்வரை லீவு பற்றி பயப்படத் தேவையில்லை."

### வெளிமாகாண மாணவர்பற்றித் திட்டமுண்டு

சங்கத்தின் நிர்வாகச் செயலாளர் திரு. பொன்னம்பலம் பேசுகையில் கூறியதாவது:-

"கல்விக் கந்தோரில் யாழ்ப்பாணத்தில் முன்பு இருந்த சில சிங்கள ஆசிரியர்களைச் சந்தித்தோம். அவர்களும் இடமாற்றம் பெறவந்திருக்கிறார்கள். அவர்களிடம் சம்பளம்பற்றி விசாரித்தோம். தங்களுக்கு முழுச்சம்பளமும் வீட்டு விலாசத்திற்கு வந்ததாகக் கூறினர்கள். ஆனல் எங்களில் பலர் இன்றும் இரண்டு மாதச் சம்பளமும் எடுக்காமல் இருக்கின்றார்கள். அவர்களுக்கு நேரடியாகச் சம்பளம் அனுப்பப்பட்டது. ஆனல் எங்களில் பலருக்கு இன்னும் சம்பளம் கிடைக்கவில்லை. இதுபற்றிக் கல்வி அமைச்சின் செயலாளரிடம் கூறினேம். அவர் உடனடியாகத் தொடர்புகொண்டு சம்பளம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு பணித்தார்.

நல்லூர் எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் எம்முடன் வந்து பல உதவிகளைச் செய்தார். கோப்பாய் எம். பி திரு. சி. கதிரவேலுப்பிள்ளை கல்வி அமைச்சுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு எங்கள் பிரச்னைகள்பற்றிச் சொன்னர்.

அடுத்த வாரம் பிரதமருடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் ஏற்ற ஒழுங்குகளைச் செய்வார். அப்போது கொள்கை அடிப்படையில் இடமாற்றம் செய்ய வழி வகுத்துத்தருமாறு நாம் கேட்போம்.

"58ம் ஆண்டுக் கலவரத்தின்பின் நாம், அப்போது காங்கேசன்துறை எம். பியாக இருந்த அமரர் செல்வநாயகத்தைச் சந்தித்துத் தென்பகுதியில் கடமையாற்றிய ஆசிரியைகள் நிலைமைபற்றி எடுத்துக் கூறினேம். அவர் உடனடியாகப் பிரதமரைச் சந்தித்து அவர்களுக்கு தமிழ்ப் பிரதேசங்களுக்கு இடமாற்றம் பெற்றுத் தந்தார். வெளிமாகாணத் தமிழ் மாணவரின் கல்வி வளர்ச்சியிலும் நாம் அக்கறை செலுத்திவருகிறோம். அதற்கான திட்டம் ஒன்றைத் தயாரித்து கல்வி அமைச்சருக்கு வழங்கியுள்ளோம்.

### 3 மாதச் சம்பளம்

ஆசிரியர் க. கணேசலிங்கம் பேசுகையில் கூறியதாவது: திருப்தி ஏற்படும்வரை வேலைக்குத் திரும்புவதில்லை என்று இங்கு கூறப்பட்டது. ஆனல் பூரணதிருப்தி ஏற்படவேண்டும். என்போன்றஎத்தனையோ குடும்பங்கள், மூன்றுமாதச்சம்பளம் எடுக்காமல் வாழ்க்கையை ஓட்டிக்கொண்டிருக்கிறார்கள். இன்றுள்ள நிலையில் சம்பளத்தையே நம்பி வாழ்க்கை நடத்திக்கொண்டிருக்கும் எத்தனையோ குடும்பத்தினர், மூன்றுமாதம் சம்பளம்கிடைக்காமல் எப்படி வாழமுடியும்! இதுபற்றி சங்கத்தினர் கூடிய கவனம் எடுத்து சம்பளம் கிடைக்க வழிசெய்யவேண்டும் நாம் ஒற்றுமையாகச் செயற்பட்டால் நிச்சயம் வெற்றி கிடைக்கும்". (க-அ)

## அன்பளிப்பு

யாழ்ப்பாணம், புதன்

ஐப்பசி வெள்ளிக்குச சமய தீட்சை வைக்கும் சபைகளுக்கு ஆறுமுகநாவலர் எழுதிய 'சைவ அநுட்டான விதி' என்னும் புத்தகத்தை மில்க்வைற் ஸ்தாபனத்தார் இலவசமாக வழங்குகின்றனர்.

## "சர்வ கட்சி மாநாட்டை உடன் கூட்டுக"

யாழ்ப்பாணம், புதன்

"பிரதமர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன தான் முன்பு கூறியபடி சர்வகட்சி மகாநாட்டை உடனடியாகக் கூட்டித் தமிழ்மக்களின் பிரச்னைகளுக்கு தீர்க்கமான வழிவகைகளை எடுக்க செயற்பட வேண்டும். இந்த சர்வகட்சி மாநாட்டில் சென்ற பொதுத் தேர்தலில் போட்டியிட்ட எல்லாக்கட்சிகளும் பங்குபெறவேண்டும்."

இவ்வாறு பிரதமரைக் கோரும் சில தீர்மானங்களை தமிழ் ஈழ ஜீ. ஜீ காங்கிரஸ் நிறைவேற்றியுள்ளது. நேற்று திரு. ஆர். என். சிவப்பிரகாசம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் மேலும் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் வருமாறு

"அரசியல் அமைப்புத் திருத்தப்பட வேண்டிய அவசியத்தை இக்கட்சி ஏற்றுக் கொண்டு தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகள் யாவும் விபரமாக எடுத்து வரையப்பட்டு நிரந்தர அரசியல் அமைப்பில் இடம் பெறவேண்டும் தமிழ் பேசும் மக்களின் தேசிய அரசுப் பேரவை உறுப்பினர்களும் ஏனைய அரசுப்பேரவை உறுப்பினர்களும் அன்மையில் நடைபெற விருக்கும் அரசியல் அமைப்புத் திருத்த விவாதத்தில் ஊக்கமுடன் பங்குபற்றிச் சனநாயக முறையில் தங்கள் சேவையைச் செய்ய வேண்டும்.

"இலங்கைச் சமூக கலாச்சார அரசியற் பொது வாழ்விலே தமிழ் மக்கள் தொடர்ந்து பங்கு பற்றுதல் வேண்டும். என்றும் தமிழ் மக்கள் சுயமரியாதையுடனும் மகிமையுடனும் வாழப் பாதுகாப்பு உறுதி யிருக்க வேண்டும் என்று திரும்பவும் வலியுறுத்தும் அதே வேளையில் அனுவசியமாக அரசியல் ஆபத்துப் பிரசாரகாரரும் குறிகிய அரசியல் நோக்குடையோரும் வேறு அசம்பாவிதங்களை என்றுமே விருப்பித் தூண்டி விடுவோரும் கிளறிவிட்ட இனப்பகைக் கலவரவன் செயல்கள் நடந்து விட்டனவே என்று மனவருத்தத்துடன் துயரம் கொள்கின்றது.

"சென்ற பொதுத் தேர்தலிலே பிரதிநிதித்துவம் பெறத் தவறிய அரசியற் கொள்கைகளிலும் இனங்களும் தேசியப் பேரவையிலும் மாவட்ட மந்திரி நியமனத்திலும் திட்டத்திலும் உரிய இடத்தைப் பெற வேண்டுமென்று இக்கட்சி கருதுகின்றது." (கா-அ)

## அரசியல்சட்டத் திருத்தம்:

# தமிழருக்கு எந்த அளவில் உதவும்?

— பற்றிமாகரன் —

ஜனதிபதிக்கு பூரண நிறைவேற்று அதிகாரத்தை வழங்கும் அரசியலமைப்பின் 2வது திருத்த வாசிப்பு மீதான விவாதம் தேசிய பேரவையில் ஆரம்பமாகியுள்ள இன்றைய சூழ்நிலையில் இத் திருத்தமானது இந்நாட்டின் பாரம்பரிய இனமாகிய தமிழ் பேசும் மக்களுக்கு எந்த அளவு சாதகமாக அமையும்என்பதை சற்று ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

இன்றைய சூழ்நிலையைத் தோற்றுவிக்க விளைக்களமாகத் திகழ்ந்த கடந்தகால நினைவுகளையும் சற்று எண்ணிப் பார்க்கவேண்டும். சோல்பரி அரசியலமைப்பின்படி சட்டங்களை உருவாக்கும் அதிகாரமும் அச்சட்டங்களை நிறைவேற்றும் அதிகாரவரம்புக்கு கட்டுப்பாடு விதிக்கும் தத்துவமும் சட்ட நிருபணத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டது. இதனை பாராளுமன்றமும் - செனற் சபையும் இணைந்து செயற்படுத்தியது அதேவேளை இச் சட்டங்களை செல்லுபடியற்ற தாக்கும் சக்தி நீதி பரிபாலனத்திடம் இருந்தது இதனலேயே 1958ம்ஆண்டு சிங்களம்மட்டும் சட்டத்தை நீதிமன்றத்தின் முன்வலுவுழக்கச் செய்யும் முயற்சி வெற்றிபெற்றது. இச் சிங்களம் மட்டும் சட்டம் சிறுபான்மையினர் பாதுகாப்புக்கவசமாகிய 29வது சரத்துக்கு விரோதமாக இருந்தது என்பதை நீதிபரிபாலனம் ஏற்றுத் தீர்ப்பு வழங்கியது. இவ் 29வது சரத்தை அகற்றுவதும் புதிய அரசியலமைப்பை நிறைவேற்றுவதற்கு சிங்கள அரசுகளை தூண்டிய அடிப்படைக் காரணங்களுள் முக்கியமான ஒன்ருகும்.

1972ம் ஆண்டு புதிய அரசியலமைப்பை யாத்ததின் மூலம் இலங்கை சிறீலங்கா குடியரசாக மாறியது நாட்டின் ஆட்சி முறைத் தத்துவத்தைப் பிரயோகிக்கும் பல்வேறு நிறுவனங்களுக்குமிடையே உள்ள தொடர்புகளை நிர்ணயிக்கும் அடிப்படைச் சட்டமான அரசியலமைப்பு இலங்கைத் தமிழ்பேசும் இனத்தை இரண்டாந்தரபிரஜைகளாக மாற்றியதால் தமிழ்த்தலைவர்கள் அச்சட்டத்தை நிராகரித்தனர் இதுதொடர்பாக வடக்கு கிழக்கில் கொந்தளிப்பான அரசியல்சூழ்நிலைகள் உருவானதும் தமிழ் இளைஞர்கள் வெஞ்சிறைகளில் அரசியல் கைதிகளாயிருந்ததும் இவைகளினல் தனிநாட்டுக் கோரிக்கை எழுந்து தேர்தலினல் வடக்கில் பூரணமாகவும் கிழக்கில் பகுதியாகவும் அது அங்கீகரிக்கப் பட்டதும் வரலாருக மாறியுள்ளது.

### அரசியலமைப்புத் திருத்தம்

1972-ம் ஆண்டின் அரசியலமைப்பு தேசியப் பேரவையை மட்டுமே சட்டவாக்கல் தத்துவத்தின் மீயுயர் கருவியாக வைத்து நீதிபரிபாலன அதிகாரத்தையும் தேசியப் பேரவைக்கேஅளித்து மக்கள் இறை

(5-ம் பக்கம் பார்க்க)



நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி 6 45 10-00
எஸ். எஸ். ஆர்.
விஜயகுமாரி
பூம்புகார்

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி பி. ப. 2-30, 7-00
சிவாஜி ஜமுனா
மருதநாட்டு
வீரன்

RIO
(Jaffna)
Daily 10-30, a.m. 4-45, 7-15 p. m.
(Today Only)
FURY
AT SMUGGLER'S BAY

மனோஹரா எம். ஜி. ஆர். - லதா-நாகேஷ்
(யாழ்ப்பாணம்) அறிமுகம் பவானி
தினசரி மு.ப. 10-30 பி.ப. 2-30 6-30, 9-45
நடித்த
உழைக்கும் கரங்கள்
(ஈஸ்ட்மன் கலர்)

சாந்தி தினசரி 10-30, 2-30, 6-30 9-45
யாழ். நகர் ஃ சிவாஜி (மூன்று வேடங்கள்)
போன்; 7642 ஃ ஜெயலலிதா
தெய்வ மகன் (புதிய பிரதி)

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர்—ஜெயபிரபா—அசோகன்
துணிவே துணை

ரியோ தினசரி 10-30, 2-30, 6-15, 9-30
போன்; 7693
(யாழ். நகர்)
எஸ். எஸ். ஆர். — விஜயகுமாரி
பணம் பந்தியிலே
அடுத்த வெளியீடு நீதிக்கு தலை வணங்கு

Regal (Jaffna)
Daily at 4-45 7-00 & 9-00 p. m. only
'SEXY SUSAN KNOWSHOW'
(Adults only Color)

வின்ஸர் தினசரி 10-30, 2-30, 6-00, 9-30
சிவாஜி, மஞ்சுளா, தேவிகா,
(யாழ்ப்பாணம்) கமலஹாசன், ஜெயசித்ரா நடித்த
சத்யம்
(ஈஸ்ட்மன் கலர்)

ராஜா தினசரி 10-30, 2-30, 6-00 9-30
போன்; 7180
(யாழ்நகர்) எம். ஜி. ஆர் — ஜெயலலிதா
நடித்த
கன்னித்தாய்

ஸ்ரீதர் தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
(யாழ்ப்பாணம்) சிவகுமார்-சுஜாதா-ஸ்ரீகாந்த்
நடித்த
அன்னக்கிளி

ராணி ஜெய்சங்கர் - பத்மினி - லக்ஷ்மி
முத்துராமன் - நாகேஷ் - சச்சு
(யாழ்ப்பாணம்)
தினசரி காலை 10-30, பிற்பகல் 2-30, 6-30 9-30
தேவரின்
பெண் தெய்வம்

# தமிழருக்கு...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

மையைப் பிரயோகிக்கும் ஏக நிறுவனமாக தேசியப் பேரவையை மாற்றியது. மக்கள் இறைமையின் பிரயோகிப்பு நிறுவனமான தேசியப் பேரவையின் காப்பாளனாக ஜனாதிபதி நியமிக்கப்பட்டார்.

ஆனால் 1977-ம் ஆண்டின் இத்திருத்தமானது மக்களின் இறைமையை அதிகாரத்தை ஜனாதிபதியிடமும் தேசியப் பேரவையிடமும் பகிர்ந்து கொள்கிறது. எனவே இரண்டு வெவ்வேறு நிறுவனங்கள் மக்களின் இறைமையை பிரயோகிக்கப் பயன்படுத்தப்படுகிறது.

இத்தகைய ஜனாதிபதியால் இறைமையைச் செயற்படுத்தும் அரசியலமைப்பைவல்லரசுகளிடம் காணலாம். இதற்கு அடிப்படைக் காரணி யுத்தப் பிரகடனங்கள் விடுக்கப்படுவதில் காலதாமதம் ஏற்படாது தடுப்பதற்கே எனலாம். ஏனெனில் பாராளுமன்றங்களில் பிரேரணைகள், தீர்மானங்கள் தீட்டி முடிப்பதற்கிடையில் யுத்த அபாயங்கள் எல்லை மீறிவிடும். ஆகவே இதனைத் தவிர்ப்பதற்கு அமெரிக்கா போன்ற நாடுகளில் ஜனாதிபதி சர்வசக்தி படைத்தவராக மாற்றப்பட்டுள்ளார்.

ஆயினும் அமெரிக்கா தனது ஜனாதிபதியைத் தெரிவுசெய்வதில் மிகவும் விழிப்பாக இருக்கிறது. மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளைப் பெறுபவர் மட்டுமே ஜனாதிபதியாகும் தகுதியைப்பெறலாம் என்பதை நாம் முக்கியமாக கவனத்தில்கொள்ள வேண்டும்.

## இலங்கையின் ஜனாதிபதி

சிறீலங்கா குடியரசின் ஜனாதிபதியும் மக்களால் தெரிவுசெய்யப்படவேண்டுமென்றே திருத்தம் கூறுகிறது. இதன்மூலம் சிறுபான்மை இனத்தவரும் ஆளுமையில் பங்கு பெறுவார்கள் என்பது சிலரின் வாதம். ஆனால் இலங்கையின் சனத்தொகையில் சிறுபான்மை இனத்தவராகிய தமிழ்பேசும் மக்கள் 35 லட்சம்பேரி மட்டுமே. எனவே இவர்களில் ஒருவர் முழுத்தமிழர்களும் ஒற்றுமையாக வாக்களித்தாலும்கூட ஜனாதிபதியாக முடியாது. ஆகவே ஆளுமை இறைமை சிறுபான்மை இனத்தைச் சென்றடைய இடமில்லை. சிலர் ஜனாதிபதியின் வெற்றி தோல்வியை தமிழ் மக்களின் வாக்குகள் நிர்ணயிக்கும் எனக் கூறுகின்றனர். இது ஜனாதிபதி தெரிவில் பலத்த போட்டி ஏற்பட்டால்மட்டுமே நிகழும் சாத்தியம் உண்டு. அதுவும் அப்படி போட்டி ஏற்படும் நேரத்தில் ஜனாதிபதி அபேட்சகர்கள் பெரும்பான்மை இனமக்களாகிய சிங்களமக்களைக் கவரக்கூடிய தேர்தல் வாக்குறுதிகளை முன்வைக்கத்தான் முயல்வார்களேயன்றி சிறுபான்மை மக்களுக்கு விமோசனம் காட்டி பெரும்பான்மை மக்களின் வெறுப்பைச் சம்பாதிக்கமாட்டார்களென்பது உறுதி. எனவே சிறுபான்மை இனம் ஆளுமையில் பங்குபற்றும் எனக் கூறமுடியாது. ஒருவேளை ஜனாதிபதி அமெரிக்கப்பாணியில் மாகாணங்கள்தோறும் 2/3 பெரும்பான்மை வாக்குப் பெறவேண்டுமென சட்டவரையறை செய்யப்பட்டிருப்பின் சிறுபான்மையினருடைய வாக்குகள் சக்திபடைத்தவையாக மாற்றப்பட்டிருக்கும்.

## ஜனாதிபதி மீயுயர்கருவி

ஜனாதிபதியை இறைமையின் மீயுயர் கருவியாக்கும் திருத்தம் அவருக்கு நீதிபரிபாலனத்தில் இருந்தும் விடுதலைகொடுக்கிறது. அதுமட்டுமல்ல தேசியப் பேரவை அவருக்குமேல் நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றினால்கூட 21 பி சரத்தின்படி ஜனாதிபதி தேசியப் பேரவையைக் கலைக்க அதிகாரம் அளிக்கிறது. இவ்வதிகார உச்ச சட்டத்தால் ஜனாதிபதியே தேசியப்பேரவையிலும் சக்திபடைத்தவராகின்றார். இவைகளின்மூலம் ஜனாதிபதிக்கு தேர்ந்தெடுக்கப்படும் யாராவது ஒருவர் தன்னை சர்வாதிகாரியாக மாற்றவிரும்பின் அதற்கும் இச்சட்டங்களே இடமளிக்கின்றது.

மேலும் ஜனாதிபதியாக ஒரு கட்சிக்காரரும் பிரதமராக வேறொரு கட்சிக்காரரும் தெரிவுசெய்யப்படுமிடத்து எழும்பிரச்னைகளுக்கு எப்படித் தீர்வுகாணலாம் என்பதற்கு எவ்வித சட்டவியாக்கியானங்களும் திருத்தத்தில் இல்லை.

## தனித்தீர்வுக்கு இடமில்லை

ஜனாதிபதி இறைமைத் தத்துவத்தின் மீயுயர் கருவியாக கருதப்படினும் பொதுப் பிரச்னைகளில் தேசியப்பேரவை-மந்திரி சபை ஆகியவற்றுடன் இணைந்தே ஜனாதிபதி கடமையாற்றவேண்டியுள்ளது. எனவே சிறுபான்மை இனப் பிரச்னைகளை அவரால் தனித்து நின்று தீர்த்துவைக்கமுடியாது மேலும் வகுப்புவாத உணர்வுடைய ஒருவர் சந்தர்ப்ப சூழ்நிலையால் ஜனாதிபதியாகக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டால் அதன் விளைவுகளை எண்ணிக்கூடப் பார்க்கமுடியாது.

# கிளிநொச்சி அகதிகளுக்கு அரை ஏக்கர் நிலம்!

## விஸ்வமடு விவசாயிகள் அபிவிருத்தி மன்றம் வழங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், புதன் வன்செயல்களால் பாதிக்கப்பட்டு வடபகுதிக்கு வந்து கிளிநொச்சி அகதிகள் முகாமில் தங்கியிருக்கும் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு அவர்கள நிரந்தரமாகக் குடியேற்றதக்க தொரு நடவடிக்கையை விஸ்வமடு விவசாயிகள் அபிவிருத்தி மன்றத்தினர் மேற்கொண்டுள்ளனர்.

இது சம்பந்தமாக திரு.க கந்தசாமியைக் காப்பாளராகக் கொண்ட மேற்படி சங்கம் கிளிநொச்சித்தொகுதி தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் திரு. ஆனந்தசங்கரிக்கு வேண்டுகோள் ஒன்றினை விடுத்துள்ளது.

அவர் வேண்டுகோளில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது;

"பாதிக்கப்பட்டு அகதிகளாக மேற்படி அகதிகள் முகாம்களில் தங்கியுள்ள நிலமற்ற மக்களுக்கு விஸ்வமடு தொடக்கம் தேவிபுரம்வரை உடையார் கட்டுக்கிராமசபை ஆக அமையக் கூடிய பிரதேசத்தில் குடியிருப்புக்களின் மத்தியில் ஒவ்வொரு வருக்கும் குடியிருக்க அரை ஏக்கர் வரையிலான நிலங்களைக் கொடுப்பதோடு, அந்நிலங்களிற் குடியமரும் ஒவ்வொரு குடும்பத்தலைவருக்கு ஒருவருடத்துக்கு திட்டமான ஊதியமாகக்கணிசமான அளவு வருமானமும் கொடுத்து ஆதரவு வழங்க இப்பகுதிக்குட்பட்ட குடியேற்ற வாசிகள் ஆவலோடுள்ளனர்.

"எனவே மேற்படி சங்க அங்கத்தினரோடிணைந்து பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட உத்தேசித்திருக்கும்காணிகளைத் தாங்கள்வந்து பார்வையிடுமாறு வேண்டுகின்றோம்.

இத்தகையதொரு திட்டத்தின் மூலம் அகதிகள் முகாம்களில் தங்கியுள்ளவர்களில் கணிசமானதொரு தொகையினர் நல்லபயனடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

(கா-அ)

# அரசியல் அமைப்—

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

யல் அமைப்பு உருவாக்கப்பட்ட நாள் முதல் கடந்த தேர்தல்வரை நடைபெற்ற சகல சம்பவங்களையும் திரு. அமிர்தலிங்கம் தமது அறிக்கையில் விபரமாகஎடுத்துரைத்தார்.

## சுதந்திரக்கட்சி வெளிநடப்பு

இதையடுத்து உரையாற்றிய திருமதி பண்டாரநாயக்கா அரசியல் அமைப்புத் திருத்தம் ஒரு தனிநபருக்கு அதிக அதிகாரத்தை வழங்குகிறது என்றும் இது சர்வாதிகாரத்தின் முதல்படி என்றும் தெரிவித்து அத்துடன் ஒரு அறிக்கையும் வெளியிட்டுவிட்டு பேரவையிலிருந்து வெளிநடப்புச் செய்தார். இவரையடுத்து 7 சுதந்திரக்கட்சி உறுப்பினர்களும் மாலை 3-30 மணிக்கு வெளிநடப்புச் செய்தனர். திரு. அனுரா பண்டாரநாயக்கா பேரவைக்கு வரவில்லை.

இவர்கள் வெளிநடப்புச் செய்தபோது அரச எம். பி. க்கள் கூச்சலிட்டனர்.

இதைத்தொடர்ந்து திரு. பிரேமதாசா, திரு. காமினி திசநாயக்கா, திரு. கே. டபிள்யு. தேவநாயகம், திரு. எஸ். தொண்டமான் உட்பட பலர் உரையாற்றினர்.

## கூட்டணியினர் வெளியேறினர்

பேரவையிலிருந்த ஒருசில தமிழர் கூட்டணி எம். பி. க்களும் மாலை 5-45 மணிபோல் சபையைவிட்டு வெளியேறினர்.

திருத்த மசோதாவின் 2வது வாசிப்பு மாலை 6-30 மணிக்கு 128 வாக்குகள் பெற்று நிறைவேறியது. எவரும் எதிர்த்து வாக்களிக்கவில்லை.

இதையடுத்து குழுநிலை விவாதத்தின்போது பிரதமர் ஜே. ஆர். ஜெயவர்த்தன இத் திருத்தப் பிரேரணைக்கு மேலும் இரு திருத்தங்களைச் சமர்ப்பித்தார்.

## ஜனாதிபதிக்கு எதிராக வழக்குத் தொடர முடியாது

ஜனாதிபதிக்கு எதிராக எவரும் வழக்குத் தொடரமுடியாது; ஜனாதிபதி அமைச்சராகவும் பதவி வகிக்கலாம் ஆகிய இரண்டுமே திரு. ஜயவர்த்தன சமர்ப்பித்த இரு திருத்தங்களுமாகும்.

திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா தம் மீது தொடர்ந்திருந்த வழக்கு விசாரணை முடிவடையாமல் இருந்தமையினால் இந்த விதியைத் தாம் முன்னர் திருத்தப் பிரேரணையின்போது சமர்ப்பிக்கவில்லையென்றும் ஜனாதிபதி மந்திரியாகப் பதவிவகித்தால் மந்திரி என்ற ரீதியில் அவர் மீது வழக்குத்தொடரலாமென்றும் தெரிவித்தார்.

இதையடுத்து இரு திருத்தங்களுடனும் மசோதாவின் மூன்றுவது வாசிப்பும் 128 வாக்குகள் பெற்று நிறைவேறியது.

[ம—இ]

# யாழ். நகரில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காணப்பட்டதாம். மற்றவருடைய பெயர் எல்சி எனக் கூறியுள்ளாராம். பொலிஸ் விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது. (கே.இ)

# இந்நாட்டில்

(1ம்பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கவில்லை.

இந்த நிலையில் தமிழர் விடுதலைக்கூட்டணி அரசியல் அமைப்பு திருத்த விவாதத்தில் எவ்வாறு கலந்துகொள்ளும் என்றும் திரு. அமிர்தலிங்கம் கூறினர். (ம-இ)

**மணிவாக்கு**

நட்பு என்பது கண்ணுக்குபுலப்படாத ஓர் அன்புணர்வு. அது எங்கே தோன்றுகிறது. எப்போது உண்டாகிறது என்று யாராலும் சொல்ல முடியாது.

— காந்தியடிகள்

ஈழநாடு
The Eelanaadu

## இந்திரா கைது

பாரதத்தின் முன்னை நாள் பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்தியும் அவரது மந்திரிசபை சகாக்கள் சிலரும் நேற்றுமுன்தினம் இந்திய புலனாய்வு பொலிசாரினால் கைதுசெய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

கைதானதின் பின்னர் திருமதி காந்தி வெளியிட்ட ஓர் அறிக்கையில், மக்களை தாம் அணுகுவதைத் தடுப்பதற்காகவும், உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தமக்கு அபகீர்த்தி ஏற்படுத்தவுமே இவ்வாறு கைதுசெய்யப்பட்டதாகக் குற்றஞ்சாட்டியுள்ளார்.

"இந்தியா என்றால் இந்திரா" என்று கூறுமளவுக்கு செல்வாக்கும் மதிப்பும் பெற்றவராக, இந்தியாவின் தலைவிதியையே நிர்ணயிக்கும் வல்லமைபெற்ற ஒரு பிரதம மந்திரியாக, உயர் நிலையில் இருந்த திருமதி காந்தி, ஒரு சாதாரண பிரஜையைப்போல கைதானார் என்று அறியும்போது பலர் கவலைப்படக்கூடும்.

இந்தியாவில் அரசியல் தலைவர்கள் கைதுசெய்யப்படுவதும், சிறைக்குப் போவதும் புதிய விஷயமல்ல. திருமதிகாந்திகைதுசெய்யப்பட்டதற்கு தெரிவிக்கப்பட்டிருக்கும் காரணம்தான் சிந்தனைக்குரியது.

ஊழல், நிர்வாகத் துஷ்பிரயோகம் போன்ற குற்றச்சாட்டுகளின் பேரிலேயே அவரும் அவரது சகாக்களும் கைதுசெய்யப்பட்டனர்.

திருமதி காந்தி பிரதமராக இருந்தபொழுது நெருக்கடி நிலை பிரகடனப்படுத்தப்பட்டு சர்வோதயத் தலைவர் திரு. ஜெயப்பிரகாஷ்நாராயண், மொரார்ஜி தேசாய் போன்ற பெரும் தலைவர்கள் எல்லாம் கைதாகி காவலில் வைக்கப்பட்டனர்.

நாடுமுழுவதும் குழப்பங்களைத் தூண்டிவிட்டு அரசைக் கவிழ்க்க திட்டம் தீட்டியதாக இவர்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டது.

பல்வேறு காரணங்களின் பேரில் கைதான வேறும் பலர் பெரும் சித்திரவதைகளுக்கும், கொடுமைகளுக்கும் ஆளாக்கப்பட்டதாகவும், சிலர் சிறைகளிலேயே உயிர் துறந்ததாகவும்கூட செய்திகள் வெளிவந்தன. இவைபற்றியெல்லாம் இப்பொழுது விசாரணைகள் நடைபெற்றுவருகின்றன.

நெருக்கடி நிலைமையின் போது இடம்பெற்ற சம்பவங்கள் யாவற்றுக்கும் திருமதி காந்தியேதான் பொறுப்பாய் இருந்திருப்பார் என்று சொல்லிவிட முடியாது. நிலைமையைப் பயன்படுத்திக்கொண்ட சந்தர்ப்பவாதிகளான சகாக்களும், அதிகாரிகளும் தங்கள் நடவடிக்கைகளின் விளைவுகளை திருமதி காந்தியின் தலையில் சுமத்திவிட்டார்கள் என்றும்கூட கூறப்பட்டது.

திருமதி காந்தியின் தலைமைக்கு மக்கள் அளித்த ஆதரவும், அதனால் ஏற்பட்ட அரசியல் செல்வாக்கும் தொடர்ந்து இருக்கும் என்றே பலபேர் எதிர்பார்த்தனர் பங்களாதேஷ் நெருக்கடியின்போது திருமதி காந்தி காட்டிய சமயோசித சாமர்த்தியத்தை பாரதமக்கள் மெச்சிப்புகழ்ந்தார்கள். இருந்தும் மக்கள் மத்தியில் தமக்கிருந்த செல்வாக்கை நிரந்தரமாக்கிக்கொள்ள அவர் தவறியது துரதிருஷ்டமே.

அரசாங்கத்தைத் தெரிவு செய்யும் அதிகாரம் மக்கள் கையில் இருப்பதனால் ஆட்சியில் அமர்பவர்கள் மக்களின் மனோநிலையை அவ்வப்போது சரியாகப் புரிந்து கொண்டு நடவடிக்கைகளில் இறங்கவேண்டும் என்பதை இது காட்டுவது ஒருபுறம் இருக்க, ஆட்சியில் அமர்பவர்களின் செயல்களை மக்களும் உன்னிப்பாக அவதானித்து வருகிறார்கள் என்பதை உறுதிப்படுத்துகின்றது.

பதவியும், அதிகாரமும் தமது சொந்த சாமர்த்தியத்தினாலும் திறமையினாலும் தான் கிடைத்துள்ளதென்று மக்களால் தெரிவு செய்யப்படும் தலைவர்கள் நினைக்க ஆரம்பிப்பார்களானால் அதுவே அவர்களின் வீழ்ச்சிக்கும் காரணமாகிவிடுகின்றது. மக்கள் ஜனநாயகம் பேணப்படும் எல்லாநாடுகளிலுமே இந்த உண்மை நிரூபிக்கப்பட்டுள்ளது.

திருமதி காந்தி மீதும், அவரது மந்திரிசபை சகாக்கள் மீதும் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் நீதிநியாயத்துடன் விசாரிக்கப்படும் என்றும், காந்திய வழியில் செல்வதாகக் கூறப்படும் பாரதஅரசு, பழிவாங்கும் நடவடிக்கையில் இறங்கியதான குற்றச்சாட்டுக்குள்ளாகாதென்றும் நம்புவோம்.

# இந்திரா பிணையில் விடுதலை; அரசு எதிர்த்து அப்பீல்!

புதுடில்லி, அக். 4

ஊழல் குற்றச்சாட்டின் பேரில் கைதான முன்னாள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி, இன்று நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டுப் பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.

இதே வேளையில் திருமதி காந்தி பிணையில் விடுதலை செய்யப்பட்டதை எதிர்த்து அரசு அப்பீல் செய்துள்ளது.

திருமதி காந்தி இன்றுகாலை புதுடில்லி தலைமை மெற்றப்போலிட்டன் நீதிபதி திரு. ஆர். தயாள் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட போதே விடுதலை செய்யப்பட்டார்.

### குற்றச்சாட்டுக்கு ஆதாரமில்லை

திருமதி காந்திக்கு எதிராகச் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு எதுவித ஆதாரமும் தெரிவிக்கப்படவில்லை. ஆகவே அவரைப் பிணையில் விடுவதைவிட வேறு வழியில்லை என்று நீதிபதி திரு. தயாள் தமது தீர்ப்பில் தெரிவித்தார்.

திருமதி காந்தி மீதான குற்றச்சாட்டுக்கள் எங்கிருந்து வந்துள்ளன என்றே தெரியவில்லை. குற்றச்சாட்டுக்களுக்கு ஆதாரமாக எந்தவித தகவல்களும் வாய்மூலமாகவோ எழுத்து மூலமாகவோ தெரிவிக்கப்படவில்லை. எனவே அவரைத் தொடர்ந்து காவலில் வைத்திருக்க எதுவித நியாயமுமில்லை என்றும் நீதிபதி திரு. தயாள் தமது தீர்ப்பில் தெரிவித்திருந்தார்.

### விரைவில் முறையான குற்றப்பத்திரம்

திருமதி காந்தியை ஆஜர் செய்த மத்திய புலனாய்வுத் துறைப் பொலிசார், ஊழல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக கைதுசெய்யப்பட்ட திருமதி காந்திக்கு எதிராக விரைவில் முறையான குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்படும் என்று தெரிவித்தனர்.

### அரசு அப்பீல்

திருமதி காந்தி பிணையில் விடுதலை செய்யப்பட்டதை எதிர்த்து அரசாங்கம் டில்லி உயர் நீதிமன்றத்தில் அப்பீல் மனு ஒன்றைத்தாக்கல் செய்துள்ளது.

மாபெரும் குற்றமிழைத்த திருமதி காந்தியை பிணையில் விடுவது சட்டவிரோதம் என்றும் அவர் தொடர்ந்து காவலில் வைக்கப்பட வேண்டும் என்றும் அந்த அப்பீல் மனுவில் கேட்கப்பட்டுள்ளது. (இ)

## காவலில் இந்திரா நன்றாக உறங்கினாராம்.

(புதுடில்லி)

'நேற்றுக் கைது செய்யப்பட்ட நான் காவலில் இருந்தபோது நன்றாக உறங்கினேன். கைதுசெய்தபோதிலும் என்னை எவரும் விசாரிக்கவில்லை.'

இன்று பிணையில் விடுதலை செய்யப்பட்ட திருமதி இந்திராகாந்தி நீதிமன்றத்தை விட்டு வெளியேவந்தபோது பத்திரிகையாளர்களிடம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தேர்தலில் அரசு ஜீப்புகளைப் பாவித்ததாக என்மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. காங்கிரஸ் கட்சியிலிருப்பதைவிட ஜனதா கட்சியிலேயே அதிக ஜீப் வண்டிகளும் பணமும் உள்ளன என்றும் காங்கிரஸ் கட்சிக்கு பணம் கொடுப்பதை தடுக்கவே பல தொழில்அதிபர்களையும் அரசு கைதுசெய்துள்ளது என்றும் திருமதி காந்தி கூறினார்.

### சுப்பிரமணியம் கருத்து

திருமதி காந்தியைக் கைது செய்தது அவரை வஞ்சம் தீர்க்கும் நடவடிக்கையே என்று முன்னாள் நிதிஅமைச்சர் திரு. ஸி. சுப்பிரமணியம் தெரிவித்தார். (இ)

## நீதிமன்றம் முன்மக்கள் ஆர்ப்பாட்டம்; 111 பேர் கைது

(புதுடில்லி)

திருமதி காந்தி இன்று காலை நீதிமன்றத்திற்குக் கொண்டுவரப்பட்டபோது நீதிமன்றத்திற்கு முன்னிலையில் பெருந்தொகையான மக்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இச்சம்பவம் தொடர்பாக ஆறு பெண்கள் உட்பட 111 பேர் கைதுசெய்யப்பட்டனர் என்றும், இங்கு இடம்பெற்ற கல்வீச்சுச் சம்பவத்தில் பொலிசார் உடபட 7 பேர் காயமடைந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாயின் இல்லத்தின் முன்னிலையிலும் சுலோகங்களைக் கோஷித்த வண்ணம் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

## கன்னதிட்டி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பளிப்பதோடு இச்சம்பவத்தை பார்த்த சாட்சிகள் இருக்கக்கூடிய சூழ்நிலையில் பொலிஸார் ஏன் இந்த விசாரணையைப் பூரணப்படுத்தவில்லை என்று எனக்கு விளங்கவில்லை.

இன்று இங்கு சாட்சியளித்தவர்களில் கு. கந்தசாமி என்பவர் சம்பவம் நடந்த இடத்திலும் இங்கும் தான் வாக்குமூலம் கொடுத்ததாகக் கூறினார்- எனினும் பொலிஸார் இந்த வழக்கில் போதிய அக்கறை காட்டவில்லை எனவே இதுபற்றி நான் பொலிஸ் உயர் அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு வருவதோடு இந்த வழக்கைப் பகிரங்க வழக்குத் தொடுநருக்கும் அனுப்பிவைக்கிறேன், என்றார். (கா இ)

(இம் மரணவிசாரணைபற்றிய விபரங்கள் நாளை வெளிவரும்.)

## அகதிகளுக்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களில் இலங்கை வந்துசேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

380 கூடாரங்கள், 14 ஆயிரம் கம்பளிகள், 6 ஆயிரம் படுக்கை விரிப்புகள், 5 கலன் நீர் கொள்ளக்கூடிய 1,500 வெற்றுக்கலன்கள், 1500கலன் நீர் கொள்ளக்கூடிய 100 தண்ணீர் தாங்கிகள், விட்டமின் குளிசைகள் ஆகிய பொருட்களையே அகதிகள் புனர்வாழ்வுக்காக இந்நிலையம் வழங்க உள்ளது.

இவற்றுடன் அகதிகளின் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கும் அவர்களைக் குடியமர்த்துவதற்கும் 25 ஆயிரம் டாலர் பணத்தையும் இந்நிறுவனம் வழங்கவுள்ளது.

இந்த உதவிகள் சமூகசேவைகள் சுகாதார அமைச்சுக்கள் மூலம் அகதிகளுக்கு வழங்கப்படும். (இ)

## மரண அறிவித்தல்

### வை. செல்லத்துரை

அல்லைப்பிட்டி இளைப்பாறிய உடையார் வைத்திலிங்கம் செல்லத்துரை காலமானார். இவர் காலஞ்சென்ற சொர்ணம்மாவின் அன்புக் கணவரும், முன்னாள் அல்லைப்பிட்டி விதானையாரும், முன்னாள் அல்லைப்பிட்டிக் கிராமச் சங்கத் தலைவருமான தவவிநாயகம், தையல்நாயகி, செங்கலடி வட்டிக்கடை முகாமையாளர் வேலாயுதபிள்ளை, சிவயோகலட்சுமி, தவமணி, நடேஸ்வரி, வாழைச்சேனை ஈஸ்வரி சினிமா உரிமையாளரும், மட்டக்களப்பு யானை மார்க் குளிர்பான விநியோகஸ்தருமான நடேசபிள்ளை ஆகியோரின் அன்புத் தந்தையாரும், கிருஸ்ணம்பாள், பிறப்பு, இறப்புப் பதிவாளர் மாணிப்பாய் ஞானசம்பந்தன், இராசம்மா, அல்லைப்பிட்டி உப தபால் அதிபர் இரத்தினசபாபதி, மட்டக்களப்புப் பிரபல வர்த்தகர் வீரகத்திப்பிள்ளை, கைத்தொழில் இலாகா, கொழும்பு சச்சிதானந்தன், மங்கையர்க்கரசி ஆகியோரின் அன்பு மாமனாரும், வேலணை இராசிப்பிள்ளை, பாக்கியம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 5-10-77 புதன்கிழமை மாலை 3-00 மணிக்கு அல்லைப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். 7312

## மரண அறிவித்தல்



### திருமதி பாக்கியம் வேலாயுதபிள்ளை

கொக்குவில் திருமதி பாக்கியம் வேலாயுதபிள்ளை காலமானார். இவர். யாழ்ப்பாணம் ராமகிருஷ்ணாஸ் அதிபர் திரு. சி. பொ. வேலாயுதபிள்ளையின் அன்பு மனைவியும் கருணமலர், கருணமூர்த்தி, கருணானந்தன் ஆகியோரின் தாயாரும், க. வை. சிவநேசன் (சமூக சேவை அதிகாரி, மன்னார்) அவர்களின் மாமியாரும், காலஞ்சென்ற இ. இராசையா, திருமதி செல்லம்மா இராசையா ஆகியோரின் அன்பு மகளும், திருவாளர்கள் இ. கந்தையா, இ. செல்வராசா, இ. செல்லையா, இ. இராசதுரை, இ. துரைசிங்கம் ஆகியோரின் சகோதரியுமாவர். அன்னாரது பூதவுடல் ஈமக்கிரியைக்காக இன்று 5-10-77 புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்குக் கொக்குவில் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

"கருணகிரி", செம்பியன் ஒழுங்கை, கொக்குவில். 7309

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 5 ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu, Post Box No. 49, Jaffna. Telegram Eelnaadu Telephone 389, Registerd as News paper in Sri Lanka.